**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த கீழ்காணும் சாலைகளை சீரமைக்க நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் இப்பணியினை தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP 2019-2020)-ன் கீழ் மேற்கொள்ள ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட பிரேரணையை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | நீளம்(கி.மீ) | மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | காந்தி நகர், தங்க சாலை தெரு, பாரதி தெரு, முத்துவிநாயகர் கோவில் தெரு ஆகிய இடங்களில் உள்ள கான்கிரீட் சாலைகளை மாற்றி பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் சௌடம்மன் கோவில் தெரு, இராஜாஜி தெரு, ஜெ.ஜெ நகர் தங்க சாலை தெரு ஆகிய இடங்களில் தார் சாலை புதுப்பித்தல் பணி | 4.11 | 250.00 |

**அலுவலக குறிப்பு:–**

1. இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் இப்பணியினை தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP 2019-2020)-ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
2. அரசு ஒதுக்கீட்டிற்கு மேல் ஆகும் கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.880/2019/இ1)

**தீர்மான எண் :** 970
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019–ம் நாளன்று நடைபெற்ற
தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்

பொருள் : 2

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2019–20 ன் கீழ் பணி மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஊழியர்களுக்கு அடையாள அட்டை வாங்குதல் பணி | GOLDEN STUDIO, ERODE |
| 2. | | JAYAM DIGITAL STUDIO |
| 3. | | AMMAN OFFSET PRINTERS AND XEROX |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய GOLDEN STUDIO, ERODE அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை ஏற்கலாம்.

(ந.க.எண்.3988/18/எச்1)

**தீர்மான எண் :** 971
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 3**

தமிழ்நாடு மாநிலமானது பயன்படுத்தப்பட்டு வீசப்படும் நெகிழியை தடை செய்யும் பொருட்டு 1986 ஆம் ஆண்டு சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்படி (மையச்சட்டம் 29/1986) 2019 ஜனவரி 1 ல் இருந்து நடைமுறையில் பயன்படுத்தப்படும் நெகிழிப் பொருட்களை உற்பத்தி செய்வதை, விற்பனை செய்வதை, போக்குவரத்து செய்வதை, சேமித்து வைத்தலை, பகிர்ந்தளித்தலை மற்றும் பயன்பாட்டினை தடை செய்து அறிவிப்பினை வெளியிட்டார்கள். இந்த நோக்கத்திற்காக அரசானது இந்திய அரசின் 1986 ஆம் ஆண்டு, பிப்ரவரி 10-ஆம் தேதியிட்ட சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் எண்.S.O. 152 (E) இன் உடன் இணைந்தமைச் சட்டம் 29/1986 இன் பிரிவு 5 இன் படி அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் எழுத்து மூலமாகவும் செயல்ரீதியாகவும் பயன்படுத்தப்படும் மற்றும் தூக்கி வீசப்படும் நெகிழி பொருள்களை தடைசெய்வதை நிறைவேற்றும் பொருட்டு மேலே கூறப்பட்ட நெகிழிப் பொருட்களை தடை செய்வது தொடர்பாக வகைமுறைகளை மீறும் போது பணத்தண்டம் விதிப்பதற்கு ஏதுவாகஅரசானது சென்னை மாநகராட்சி சட்டம் 1919 (தமிழ்நாடு சட்டம் IV/1919)க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920(தமிழ்நாடு சட்டம் V,/1920)க்கு தக்கவாறு கீழ்க்கண்ட விவரப்படி திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது. அதன்படி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 12/2019 சட்டத்தினை நடைமுறைப்படுத்திட ஏதுவாக இந்நகராட்சியில் மன்ற தீர்மானம் நிறைவேற்றிடவும், இது குறித்து ஏற்கனவே வெளியிடப்பட்ட துணைவிதிகள் கூடுதலாக புகுத்தல் மற்றும் திருத்தம் செய்திட (Amendment) தக்க நடவடிக்கை எடுத்திட தெரிவித்து வரப்பெற்ற நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.44555/2013/பி3, நாள்.28.02.2019 மன்றத்தீர்மானம் பார்வைக்கும் அனுமதிக்கும்

# 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 306 மற்றும் 308க்கு திருத்தம்

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு சட்டம் V /1920 | 1. | 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பின்பு (இதில் இதன்பின்பு இந்தப்பகுதியில் 1920 ஆம் ஆண்டு சட்டம் என சுட்டப்பட்டுள்ளவாறு) 306 ஆம் பிரிவில் (28) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும். | 306 ஆம் பிரிவிற்கான புகுத்துதல் |
| (28-A) | | " (28-A) பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (Plastics) சேகரித்தலை, வழங்குதலை, கொண்டு செல்லுதலை, விற்பனை செய்தலை மற்றும் பகிர்ந்தளித்தலை தடை செய்வதற்காக," | |
| | 7 | 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 308ஆம் பிரிவில், -- | 308 ஆம் பிரிவிற்கான திருத்தம் |
| | | a) கூறில் "ஐம்பது ரூபாய்" மற்றும் "பதினைந்து ரூபாய்" எனும் சொற்றொடருக்காக "ஓராயிரம் ரூபாய்" மற்றும் "இருநூற்று ஐம்பது ரூபாய்" எனும் சொற்றொடர் முறையே மாற்றாக அமைத்தல் வேண்டும். | |
| | | b) கூறில் "பத்து ரூபாய்" எனும் சொற்றொடருக்காக "இருநூறு ரூபாய்" எனும் சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். | |
| 308-A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல் | 8 | 1920 ஆம் ஆண்டு சட்டத்தின் 308 ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவைப் புகுத்துதல் வேண்டும் அதாவது:-<br><br>"308- A. பயன்படுத்திய தூக்கி எறிகின்ற நெகிழியை தடைசெய்யும் துணைவிதிகளை மீறியதற்கான தண்டம்.- 306 ஆம் பிரிவின் (28-A) கூறின்படி, துணைவிதியை இயற்றுகையில் 308 ஆம் பிரிவில் எது எவ்வாறு காணப்படினும், மன்றமானது துணைவிதிகளை மீறுகின்ற நபர் எவரும் VII-A ஆம் இணைப்பு பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மன்றத்தால் நிர்ணயம் செய்யலாகும் தொகைக்கு மிகாத பணத்தண்டம் என்ற முறையில் செலுத்துவதற்கு கட்டுப்பாடு உடையவராதல் வேண்டும் என்பதற்கு வகை செய்யலாம். நபர் நான்காவது முறையாக மீறுவாரானால், இந்தச்சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள வணிக உரிமத்தை இரத்து செய்தல் வேண்டும்". | |
| VII A எனும் புதிய இணைப்பு பட்டியலை புகுத்துதல். | | 1920 ஆம் ஆண்டு VII ஆம் இணைப்பு பட்டியலுக்குப் பின்பு பின்வரும் இணைப்பு பட்டியலை புகுத்துதல் வேண்டும். அதாவது:- | |

**இணைப்பு பட்டியல் VIII-A**

**பிரிவு 306 (28- A) இன்படி இயற்றப்பட்ட துணைவிதிகளை மீறுவதற்கான தண்டங்கள்.**

| வரிசை எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | இருபத்தைந்தாயிரம் ரூபாய். | ஐம்பதாயிரம் ரூபாய் | ஒரு லட்சம் ரூபாய். |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | பத்தாயிரம் ரூபாய் | பதினைந்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய். |
| 3 | மளிகைக் கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியைப் பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்களால் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ஒருநூறு ரூபாய் | இருநூறு ரூபாய் | ஐநூறு ரூபாய்.” |

இந்தத் துணைவிதிகள் தொடங்கிய நாளும் அதற்குப் பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கைக் காலம் 90 நாள்கள் உண்டு. அதற்குப் பிறகு இந்தத் துணைவிதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (அட்டவணை-1) படி இந்தத் துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு அபராதம் விதிக்கப்படும்.

துணைவிதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் மேற்குறிப்பிட்டுள்ளபடி தண்டத்தொகை கட்டஇயலவில்லை என்றால் அவன்/அவள்-க்கு எதிராக நகரக் காவல் சட்டம் மற்றும் மாவட்டக் காவல் சட்டம்/ இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் படி வழக்குத் தொடரப்படும்.

**மேல்முறையீட்டிற்கு உரிமை**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மைத் திட்டம் 2016 துணைவிதிகள் திருத்தம் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் நாளிதழில் வெளியிட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் பொதுமக்கள் யாவரும் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்ய உரிமை உள்ளவர்களாவர். இந்தத்துணைவிதிகள் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்றபின் நடைமுறைப்படுத்தப்படும்.

**அலுவலகக்குறிப்பு:**

நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-இன் கீழ் உட்பிரிவு 28- A என புகுத்தம் செய்திருப்பதையும் மற்றும் பிரிவு 308-ன் கீழ் உட்பிரிவு 308 A என உட்புகுத்தம் செய்து திருத்தம் செய்து வெளியிடப்பட்ட சட்டத்திருத்தம் செயலாக்கம் செய்திட புன்செய்ப் புளியம்பட்டி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மைத் திட்டம் 2016-ன் கீழ் உரிய துணைவிதிகள் ஏற்படுத்திட அல்லது துணைவிதிகள் திருத்தம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 747/2018/எச்1)**

**தீர்மான எண் :** 972
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019–ம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தை கண்காணிக்க CCTV Camera ஐந்து எண்ணிக்கை 1. அலுவலக ஆணையாளர் அறை முன்பாக, 2. பொது பிரிவு, 3. வருவாய் பிரிவு மற்றும் பொறியர் பிரிவு, 4. காசாளர் அறை, 5. சுகாதார பிரிவு ஆகிய இடங்களில் பொருத்துவதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.0.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 973
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019—ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 5

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீருக்கு சுத்திகரிப்பு பணி மேற்கொள்ள VACUUM CHLORINATION GAS CYLINDER பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. சுத்திகரிப்பு பணி மேற்கொள்ள 2019-2020 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் CHLORINATION GAS CYLINDER விநியோகம் செய்யும் பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—

1. அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 974
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 6

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 ஜெ.ஜெ நகரில் பிரதான குடிநீர் விநியோக குழாய் மற்றும் செங்கல் தூண்கள் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 975
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 7

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட அலுவலக கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டி மற்றும் நகராட்சி வாரச் சந்தையில் நகராட்சி பெயர் பலகை அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. அனுமதிக்கலாம்.
2. வருவாய் நிதியின் கீழ் பணியை மேற்கொள்ளவும் தனிஅலுவலரின் ஒப்புதல் வழங்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.848/2019/இ1)

**தீர்மான எண் :** 976
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 8

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் வீட்டுக்கு வீடு குப்பை சேகரிக்கும் பணிக்காக 13 எண்ணிக்கை தானியங்கி குப்பை சேகரிக்கும் வாகனம் (Battery Operated Vehicle) 7th மற்றும் 8th SHPC வாயிலாக வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தானியங்கி குப்பை சேகரிக்கும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய நிறுத்துகூடம் (Shed) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
2. வருவாய் நிதியின் கீழ் பணியை மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 977
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 9

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 தில்லை நகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 978
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019–ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 10**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளில் உருவாகும் மக்கும் குப்பை, மக்காத குப்பை, E-Waste, அபாயகரமான குப்பைகள் போன்றவற்றை அளவீடுகள் செய்வதற்கு எடை கருவி (Weighing Machine) அவசியமாக தேவைப்படுகிறது. பொதுசுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.0.17 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.876/2019/எச்1)

**தீர்மான எண் : 979**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 31.05.2019—ம் நாளன்று நடைபெற்ற**
**தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 11**

1920—ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 328 மற்றும் 329—ன் படி கட்டிடம் மற்றும் கட்டிட விண்ணப்பங்களுக்கு விதிக்க கூடிய லைசன்ஸ் கட்டண விகிதம் பற்றியது

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் கட்டிட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்களுக்கு இந்நகராட்சியின் நகர்மன்ற தீர்மான எண்.484 நாள்.30.07.2013—ன்படி அனுமதி அளிக்கப்பட்டதின் படி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளவாறு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் கட்டணம் ஏதும் உயர்த்தப்படவில்லை. தற்போது அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019—ன் படியும், தமிழ்நாடு அரசிதழ் பகுதி III பிரிவு 1(9) நாள்.04.02.2019—ன் படியும் அரசிதழ் வெளியீடு செய்துள்ளதின்படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் 5 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமக்காலம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதால் வசூலிக்கப்படும் கட்டணங்கள் 5 (ஐந்து) ஆண்டுகளுக்கு கட்டிட உரிமக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்தும் மற்றும் கட்டிட உரிமக்காலம் 5 ஆண்டுகளுக்கு அனுமதிக்கவும், மேற்கண்ட கட்டிட உரிமக் கட்டணங்களை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் உள்ளதால் 01.04.2019 முதல் உயர்த்தப்பட்ட கட்டணங்கள் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு வசூலிக்கவும் , மன்றத்தின் முன் அனுமதி பெற்று கட்டணம் வசூல் செய்யலாம்

திருத்தப்பட்ட கட்டிட உரிமையாணைக் கட்டண பட்டியல் அட்டவணை

| வ.எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவுகள் | அனுமதிக்கப்பட்ட இனங்களில் தற்போது வசூலிக்கப்படும் கட்டிட உரிமங்களின் விபரம் | தற்போது நகராட்சியால் வசூலிக்கப்படும் கட்டிட உரிமங்களின் விபரம் | | | திருத்தி அமைக்கப்பட்டுள்ள கட்டிட உரிமங்கள் கட்டண விபரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அளவு | காலம் | தொகை . ரூ | அளவு | காலம் | தொகை ரூ |
| —1 | —2 | —3 | —4 | | | —5 | | |
| 1 | 197 | கட்டிட விண்ணப்பம் கூர்ந்தாய்வு கட்டணம் | ஒன்றுக்கு | 3 ஆண்டு | 100 | — | விண்ணப்பம் ஒன்றுக்கு | 500 |
| 2 | 197(1) a | காரை மட்டப்பா, RCC ஓடு, AC தகரம், மரம் போன்ற பொருட்களால் | | | | | | |
| | | அ) குடியிருப்பு மனை | ஒன்றுக்கு | 3 ஆண்டு | 100 | மனை ஒன்றுக்கு | 5 ஆண்டு | 200 |
| | | ஆ) குடியிருப்பு அல்லாத மனை | ஒன்றுக்கு | 3 ஆண்டு | 200 | ஒரு மனைக்கு | 5 ஆண்டு | 400 |
| 3 | 197 மற்றும் 215 | குடியிருப்பு கட்டிடம் | | | | | | |
| | | 1) ஆர்.சி.சி கூரை மெட்ராஸ் கூரை தகரம், சிமெண்ட் கூரை கட்டிடம் கட்ட தரைதளம் மற்றும் தரை கீழ் தளம் | 1 ச.மீ | மூன்று | 150 | 10 ச.மீ அதன் பாகம் | 5 ஆண்டு | 300 |
| | | 2) | 1 ச.மீ | மூன்று | 250 | 10 ச.மீ | 5 | 500 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முதல் தளம் | | | | | ஆண்டு | |
| | | 3) இரண்டாவது தளம் அதற்கு மேலும் குடியிருப்பு அல்லாத வியாபார மற்றும் தொழிற்சாலை கட்டிடம் | 1 ச.மீ | மூன்று | 300 | 10 ச.மீ | 5 ஆண்டு | 600 |
| | | 4) இரண்டாவது தளத்திற்கு மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | – | – | – | – | 5 ஆண்டுக்கு | ஒவ்வொரு ஏற்கனவே வசூல் செய்த தொகையிலிருந்து ரூ.100 கூடுதலாக |
| | | வணிகம் | | | | | | |
| | | 1) தரைதளம் மற்றும் தரை கீழ் தளம் | 1 ச.மீ அதன் பாகம் | மூன்று ஆண்டு | 300 | 10 ச.மீ | 5 ஆண்டுக்கு | 600 |
| | | 2) முதல் தளம் | 1 ச.மீ அதன் பாகம் | மூன்று ஆண்டு | 400 | 10 ச.மீ | 5 ஆண்டுக்கு | 800 |
| | | 3) இரண்டாவது தளம் அதற்கு | 1 ச.மீ அதன் பாகம் | மூன்று ஆண்டு | 400 | 10 ச.மீ | 5 ஆண்டுக்கு | 800 |
| | | எல்லைச்சுவர் கட்ட அனுமதிக்க (1.82 மீட்டர் உயரத்திற்குள்) | – | – | – | 10 ச.மீ | 5 ஆண்டுக்கு | 50 |
| | | 4) இரண்டாவது தளத்திற்கு மேல் ஒவ்வொரு தளத்திற்கும் | – | – | – | – | 5 ஆண்டுக்கு | ஒவ்வொரு ஏற்கனவே வசூல் செய்த தொகையிலிருந்து ரூ.100 கூடுதலாக |
| 4 | 199 முதல் 201 | கிணறு , குளம், ஊற்று போன்றவைகள் தோண்டுதல் | ஒன்றுக்கு | 3 ஆண்டுக்கு | 300 | 5 ஆண்டுக்கு | – | 2000 |
| 5 | 199 முதல் 201 | நாடகம், சினிமா, சர்க்கஸ் போன்ற காட்சிகள் நடத்துவதற்கு கொட்டகை அமைக்க | ஒன்றுக்கு | 3 ஆண்டுக்கு | 300 | 10 சதுர மீட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு | 5 ஆண்டுக்கு | 600 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1. RCC தகரம், AC ஷீட், காரை மட்டப்பா ஆகிய நிரந்தரமான கட்டிடங்கள் | ஒன்றுக்கு | 3 ஆண்டுக்கு | 150 | 10 சதுர மீட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு | 5 ஆண்டுக்கு | 300 |
| | | 2. AC ஷீட் தகரம் மற்றும் தீப்பிடிக்காத கூரை (Life Roof) ஆகியவை | – | – | – | 10 சதுர மீட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு | 5 ஆண்டுக்கு | 100 |
| | | தற்காலிக கொட்டகை | – | – | – | 10 சதுர மீட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு | நாள் ஒன்றுக்கு | 50 |
| | | அ) மேற்கூரையுடன் கூடியது | – | – | – | – | – | – |
| | | ஆ) திறந்த வெளியுடன் கூடிய சுற்றுப்புற கொட்டகை | – | – | – | – | – | – |
| | | 3. குளியல் அறை | ஒன்றுக்கு | 3 ஆண்டுக்கு | 100 | ஒன்றுக்கு | 5 ஆண்டுக்கு | 200 |
| | | 4. மல அறை | ஒன்றுக்கு | 3 ஆண்டுக்கு | 100 | ஒன்றுக்கு | 5 ஆண்டுக்கு | 200 |
| | | 5. குளியல் அறை மல அறை சேர்ந்தது | ஒன்றுக்கு | 3 ஆண்டுக்கு | 100 | ஒன்றுக்கு | 5 ஆண்டுக்கு | 300 |
| | | 6. நச்சு தொட்டி (செப்டிக் டேங்க்) | ஒன்றுக்கு | 3 ஆண்டுக்கு | 100 | ஒன்றுக்கு | 5 ஆண்டுக்கு | 200 |
| | | 7. மாடிப்படி அமைக்க | ஒன்றுக்கு | 3 ஆண்டுக்கு | 100 | ஒன்றுக்கு | 5 ஆண்டுக்கு | 200 |
| | | 8. வாட்டர் டேங்க் | ஒன்றுக்கு | - | – | ஒன்றுக்கு | 5 ஆண்டுக்கு | 500 |
| | | 9. போர்வேல் | ஒன்றுக்கு | - | – | ஒன்றுக்கு | 5 ஆண்டுக்கு | 500 |
| 6 | 186 | 1) முன் அனுமதி பெறாமல் துவங்கப்படும் கட்டிடங்கள் | கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% தாமதக்கட்டணம். | | | | | |
| | 204 | 2) அனுமதிக்கப்பட்ட அனுமதியின் காலத்தை புதுப்பிக்க | கட்டிட உரிமத்தைப் புதுப்பிக்க அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் புதுப்பித்தால் உரிமக் கட்டணம் தொகையினை செலுத்தப்பட வேண்டும். கட்டிட அனுமதிக்காலம் முடிவடையும் முன்பே விண்ணப்பித்து உரிமக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 175 முதல் 177 | கட்டிட காரியங்களுக்கு நிலத்தை விட்டு மனைகளாகவும் தெருக்களாகவும் ( லே அவுட் அனுமதி கோரல் | ஒரு ஏக்கர் | ஒரு முறை | 2500 | ஒரு ஏக்கர் அதன் பாகத்திற்கு | ஒரு முறை | 5000 |
| 8 | 186 | இதர வகைகள் | | | | | | |
| | | 1) கட்டிடங்கள் வேலை செய்வதற்கு தெரு ஓரங்களில் குழிதோண்டி சாரம் கட்டுவதை அனுமதிக்க | மாதம் | ஒரு முறை | 50 | ஒரு சதுர மீட்டர் | ஆறு திங்கள் | 100 |
| | | 2) அனுமதிக்கப்பட்ட வரை படங்களுக்கு அத்தாட்சி நகல் வழங்க | ஒரு நகல் | ஒரு முறை | 50 | ஒரு நகல் | ஒரு முறை | 100 |
| | | 3) கட்டிட உரிமத்தின் உத்தரவு நகல் வழங்க | – | – | – | – | – | – |
| | | 4) நான்குமால் அளக்க (ஒரு வளைவுக்கு) | – | – | – | – | – | – |
| | | 5) நகர வரைபட நகல் (Town Map) | | | | | | |
| | | a) பெரியது வழங்க | ஒன்றுக்கு | ஒரு முறை | 500 | A2 Size | ஒரு முறை | 1600 |
| | | b) சிறியது வழங்க | ஒன்றுக்கு | ஒரு முறை | 200 | A3 Size | ஒரு முறை | 1000 |
| | | 6) நகராட்சியிலிருந்து இதர சான்றுகள் வழங்க | 3 ஆண்டுக்கு | – | – | – | ஒரு முறை | 1000 |
| | | 7) தெரு, ரோடு ஓரங்களில் கட்டிடம் கட்டுவதற்கு தேவையான கல், மணல் போன்ற கட்டிட பொருள்களையும், கட்டிட இடிபாடு கழிவுப்பொருள் களையும் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாமல் | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | சேமித்து வைப்பதற்கு அனுமதி அளித்தல். | | | | | | |
| | | அ) புதிய கட்டிடங்களுக்கு | 3 ஆண்டுக்கு | ஒரு முறை | 50% உரிமக்கட்டணம் | – | 5 ஆண்டுக்கு | உரிமையாணைக் கட்டணத்தில் 50 % |
| | | ஆ) பழைய கட்டிடங்களை இடித்து மாறுதல் செய்வதற்கு | 3 ஆண்டுக்கு | ஒரு முறை | 1500 | – | 5 ஆண்டுக்கு | 5000 |
| | As per G.O.No. 18, Dt: 04.02.2019 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 8) கட்டிட வரைபட வரைவாளர் வைப்புத் தொகை | – | – | 1000 | ஒரு வருடம் | 5 ஆண்டுக்கு | 5000 |
| | | 9) கட்டிட வரைபட வரைவாளர் உரிமம் புதுப்பிக்க | – | – | – | ஒரு எண்ணம் | 5 ஆண்டுகள் | 5000 |
| | | 10) நகராட்சி எல்லைக்குள் நிறுவப்படும் கைபேசி (Cell Phone) | – | – | – | – | – | கட்டணம் இல்லை |
| | | கோபுரங்கள் அனைத்துக் கொள்ள | – | – | – | – | – | இலவசம் |
| | | 11) கோடைகால பந்தல்கள் (போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் கால்கள் இல்லாமல்) | – | – | – | – | – | இலவசம் |
| | | 12) மத சம்பந்தமான திருவிழா காலங்களில் கோவில் முன்பு பந்தல் போடுவதற்கு தேர்தல் காலங்களில் பொது இடங்களில் பந்தல் போடுவதற்கு | – | – | – | – | – | இலவசம் |
| | | 13) திருமணம் மற்றும் விசேஷங்களுக்கு பந்தல் (போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல்) | – | – | – | – | – | – |

| வ. எண | சட்டப் பிரிவு /விதிகள் | உரிமம் வழங்கப்படும் காரணம் | கட்டண விகிதம் ( ரூபாயில்) | | எவ்வளவு பரப்பு/ எண | உரிம காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | | குடியிருப்பு உபயோகம் கட்டிட அபிவிருத்திக் கட்டணம் | - | 7 | ஒரு சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு முறை | கட்டிட விண்ணப்பம் பெறப்படும் போது |
| | | நில அபிவிருத்திக் கட்டணம் | 2 | 5 | ஒரு சதுர மீட்டர் அலலது அதன் பாகத்திற்கு | ஒரு முறை | கட்டிட விண்ணப்பம் பெறப்படும் போது |
| | | குடியிருப்பு அல்லாத உபயோகம் கட்டிட அபிவிருத்திக் கட்டணம் | - | 10 | ஒரு சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு முறை | கட்டிட விண்ணப்பம் பெறப்படும் போது |
| | | நில அபிவிருத்திக் கட்டணம் | - | 7 | ஒரு சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு முறை | கட்டிட விண்ணப்பம் பெறப்படும் போது |
| 10 | | மனைப்பிரிவு வரைபடம் நகல் | - | 1000 | ஒன்று | ஒருமுறை | - |
| 11 | | மழைநீர் சேகரிப்பு தொட்டி, முன்வைப்புத் தொகை | 2750 | 4000 | ஒன்று | ஒருமுறை | கட்டிடத்தை கட்டி முடித்தவுடன் திரும்ப வழங்கப்படும் |
| 12 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | கூர்ந்தாய்வுக் கட்டணம் | - | 2 | 1. ச.மீ | 5ஆண்டுகளுக்கு | - |
| 13 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | 1st Revised Plan | - | 1 | 1. ச.மீ | 5ஆண்டுகளுக்கு | - |
| 14 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | 2nd Revised Plan | - | 40.பைசா | 1. ச.மீ | 5ஆண்டுகளுக்கு | - |
| 15 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | 3rd Revised Plan | - | 20.பைசா | 1. ச.மீ | 5ஆண்டுகளுக்கு | - |
| 16 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | மனைப்பிரிவு / மனைஉட்பிரிவு / மனை ஒருங்கிணைப்பு | - | 75.பைசா | 1. ச.மீ | ஒரு முறை மட்டும் | - |
| 17 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | உபயோக மாற்றம் ( Reclassification ) | - | 20000 | மொத்த பரப்பளவிற்கு | ஒரு முறை மட்டும் | - |

மேற்கண்ட பட்டியலில் நிர்ணயிக்கப்பட்ட கட்டிட உரிமக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை புதியதாக விண்ணப்பிக்கும் கட்டிட விண்ணப்பங்களுக்கு 5 ஆண்டுகளுக்கும் மற்றும் கட்டிடம் உரிமம் புதுப்பிக்க அனுமதி கோரும் விண்ணப்பங்களுக்கு மேற்கண்ட கட்டண விபரங்களை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டி மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 980
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்) ஆ. தாணுமூர்த்தி,(பொ)
தனி அலுவலர்,
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர் ,(பொ)
புன்செய் புளியம்பட்டி நகராட்சி.